# கதிரமலைப் பத்து

பாகம் 62

கிழக்கு மாகாணத்தில் சிவ ஆலயங்களைவிட பரவலாக முருகன் கோயில்கள் அனேக ஊர்களில் உள்ளன. ஆனாலும் மக்கள் அதிகம் கூடும் உற்சவ காலங்களை உடைய கோயில்களாகக் குறிப்பிடக்கூடியவை மட்டக்களப்பின் தெற்கில் அம்பாறை மாவட்டத்தில் உகந்தை திருக்கோயில், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மண்டூர், சித்தாண்டி மற்றும் மகாவலி கங்கையின் கரையிலுள்ள வெருகல் ஆகிய ஐந்துமே. ஏனைய கோயில்கள் சிறிய ஊர்க் கோயில்களாயுள்ளன. இந்தக் கோயில்களெல்லாம் தமது கொடியேற்றத்தைக் கதிர்காம உற்சவத்திற்குச் சற்று முன்போ பின்போ செய்து தீர்த்தத்தையும் நிறைவேற்றிவிடுவதால் கதிர்காமம் செல்லும் பக்தர்கள் இந்தக் கோயில்களின் உற்சவங்களையும் போகும் போதோ அல்லது வரும் போதோ கண்டு செல்வது வழக்கமாகும்..

ஆடி மாதத்திலிருந்து ஆவணி வரையான காலப்பகுதிக்குள் அனேகமாகப் பல முருகன் கோயில்களில் திருவிழாக்களும் தீர்த்தமும் நடைபெறும். இந்தக் கோயில்களுக்கும் கதிர்காமத்திற்கும் மிகப் பழங்காலந்தொட்டே தொடர்புகள் இருந்திருக்கின்றன. குறிப்பாக மண்டூர் முருகன் ஆலயத்தில் நடைபெறும் வழிபாட்டு முறை அப்படியே கதிர்காமத்தை ஒத்திருக்கிறது. அங்குள்ள கோயிற் பூசகரைக் கப்புகனார் என்று கூறுவர். அவ்வாறே கதிர்காமத்துப் பூசகரைச் சிங்களத்தில் கப்புறாளை என்கின்றனர். கோயில் நிர்வாகப் பொறுப்பிலுள்ளவர்களை வண்ணக்குமார் என்பார்கள். இதே சொல் சிங்களத்திலும் பாவிக்கப் படுகின்றது.

கோயிலில் பூசை செய்யும்போது உட்திரையைத் திறக்காமல் வெளிப்புறமாய் நின்று கப்புகனார் வாயில் துணி கட்டியபடி தூப தீபங்களைக் காட்டிப் பூசைசெய்வார். கதிர்காமத்திலும் இவ்வாறே நடைபெறுகின்றது. பிராமண ஐயர்மார் பூசைசெய்வதில்லை. முற்காலத்திலிருந்து பல கோயில்களிலும் நடைபெற்று வந்த இந்தப் பூசை முறையை மாற்றி இப்போது சில கோயில்களில் சமஸ்கிருத மந்திரங்களைக் கொண்டு வந்துவிட்டார்கள்.

இந்தத் தமிழ் வழிபாட்டு முறையின் அடுத்த சிறப்பம்சம் உற்சவகாலங்களில் பாடப்படும் பக்திப்பாடல்களாகும். இவை முழுக்க முழுக்க அக்காலத்தில் வாழ்ந்த உள்ளூர்ப் புலவர்களால் இயற்றப்பட்டவை. கிழக்கு மாகாணத் தமிழர்கள் தங்கள் பக்தியை வெளிக்காட்டத் தனியே தேவார திருவாசகங்களிலும் பொருள் விளங்காத சமஸ்கிருத மந்திரங்களிலும் தங்கியிருக்காமல் அந்தக் காலத்திலிருந்தே உளத்தூய்மையோடு தம் கவித்திறனை வெளிப்படுத்திப் பாடிய இனிய பக்திப் பாடல்கள் நிறைய உள்ளன.

## அலசுவாரம்

அலசுபவர் : **மட்டைக்கிளப்பான்**

காவடி எடுத்து முருக பக்தியை வெளிக்காட்டும் போது இந்தப் பாடல்களே இறை நம்பிக்கை மிகுந்த அந்த மக்களுக்கு உருவேற்றும் மந்திரங்களாய் உதவுகின்றன. மிகுந்த பக்தியுணர்வோடும் நிறைந்த கவித்துவத்தோடும் கிராமிய மொழி வழக்கில் யாருக்கும் விளங்கக் கூடியதாய் புனையப்பட்டுள்ள அப் பாடல்களைப் பாடும்போது தம் நிலை மறந்து ஆனந்த பரவசங் கொண்டு காவடியாடித் தம் நேர்த்திக் கடனை நிறைவு செய்த பலரை நான் கண்டிருக்கிறேன். அந்தக்கிராமியப்பாமரனின் கண்களில் வீசும் தெய்வீக ஒளியை அதில் மிளிரும் சாந்தியை நமது ஆடம்பரக் கோயில்களுக்குச் சென்று அர்ச்சனை போட்டுவிட்டு வருபவர்களிடம் காணமுடியாது.

'பொருளறிந்து செய்யா வினையால் இருளுறைந்த கண்ணினொடு தோன்றும் இம் மாக்கள் மருள் நிறைந்த வாழ்வில் உழன்று மனங்கவன்று மடியும் இழி நிலைக்கே இன்றைய எமது கோயில் அனுட்டானங்கள் கொண்டு செல்கின்றன'.

நமது மொழியில், நமது பண்பாட்டின் அடியொற்றி, நம் நெஞ்சறியும் நன்னயச் சொல் கொண்டு இறைவனைப் போற்றுதலிலுள்ள ஆனந்தத்ததை அனுபவித்த அக்காலப் பக்திமான்களால் இயற்றப்பட்ட ஓரிரு பாடல்களை இங்கு தருகிறேன்.

காவடி எடுப்பவரை உருக்கொள்ளச் செய்து ஆனந்த பரவசத்துடன் ஆடச்செய்வதற்காகப் பாடப்பெற்ற பதிகமொன்றைக் 'கதிரமலைப் பத்து' என்பார்கள். அன்று சூரன்கோட்டை அல்லது கதிரமலையென்று அழைக்கப்பட்டு இன்று பௌத்த பிக்குகளால் விகாரை கட்டி அபகரிக்கப்பட்டுவிட்ட கதிர்காமத்தின் அருகிலுள்ள தலத்தின் மீது பாடப்பட்டதே இந்தப் பதிகமாகும்.

'கழுகு மலை தனிலுறையும் முருகவேளே
கருத்துடனுன் பாதமலர் தானே பற்றப்
பழுதொன்றும் வாராமல் காக்கவேணும்
பச்சை மால் மருகா பார்வதியாள் மைந்தா
வழுவாமல் என் குறைகள் தீர்க்க வேணும்
வரும் பிழைகள் தனையகற்றி வழியே
செய்வாய்
தெளிவாக உன்பாதம் துதித்தேனையா –
சுவாமி
தென் கதிரை முருகோனே தெரிசிப்பாயே'

'காடுதனில் வேங்கைமரமாகி நின்றாய்
கானவர்கள் கண்டுன்னைக் கடுவேகத்தால்
சாடிடவே மனதிலெண்ணிப் பரிகசித்துத்
தானெடுத்தார் தவிடு பொடியாக்கவென்று
கூடியே குறவரெல்லாம் நிமித்தங்கண்டு
குமரவேளென்றெண்ணிக் குலைந்திட்டார்கள்
தேடியேயுன்பாதந் துதித்தேனையா – சுவாமி
தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே'

இங்கே பெரிய தமிழ்ப் பாண்டித்யமில்லை. ஆனால் பக்தி தெரிகின்றது. அருஞ்சொற்களில்லை ஆனால் தமிழ் மீதுள்ள ஆளுமை புலனாகின்றது. எந்த இடத்திலாவது சற்று நின்று நிதானித்து சொற்களைப் போட்டு எழுதப்பட்ட கவிதையாகவல்லாமல் எவ்வித தயக்கமுமின்றி ஆற்றொழுக்குப் போலப் பக்தனின் வாயிலிருந்து வந்து விழுந்த கவிதை வரிகளாக அவையுள்ளன. கிராமிய மொழிநடையில் எந்தப் பண்டிதனுக்கோ, புலவனுக்கோ பயப்படாது எழுதப்பட்ட பாடல்கள் வரிகள் இவை.

இந்தப் பாடலைப்பாடிக் கோயிலின் மூல மூர்த்திக்கு முன்னே சாஷ்டாங்கமாகக் குப்புற விழுந்து கிடக்கும் கிராமத்து இளைஞனின் முதுகில் கொழுக்கி முள் பாய்ச்சி அவனை இழுத்து நிமிர்த்தி வாயிலும் செடில் குத்தும் போது அவன் உணர்ச்சிப் பிழம்பாய்விடுகிறான். உருவேறி ஆடத் தொடங்குகிறான். அதன் பிறகு துள்ளு நடைப் பாடல்கள் தாளத்துடன் பாடப் படும். காவடியென்பது இதுதான். முன்பெல்லாம் காவடி இப்படித்தான் ஆடப்பட்டது.

சிறு குழந்தைகளுக்கு முள் பாய்ச்சினால் தாங்கமாட்டார்கள் என்பதற்காக சிறிய காவடியைத் தோளில் வைத்து இத்தகைய பாடல்களைப் பாடிக் கூட்டிச் செல்வார்கள். அதனைப் பாற்காவடியென்று கூறுவர்.

பிற்காலத்தில் தமிழரின் விடிவுக்காக முருகனுக்கு நேர்த்தி வைத்துப் பல இளைஞர்கள் சில தலைவர்களின் தலைமையில் காவடியாடினார்கள். தம்பிலுவிலைச் சேர்ந்த அறப் போரணித் தலைவர் அரியநாயகம் அவர்கள் மேற்கண்ட கதிரமலைப்பத்தின் பாணியில் ஒரு விடுதலைப் பத்தைப் பாடியிருக்கிறார்.

'குலைகாட்டும் செங்குரும்பை முலையாள்
வள்ளி
குலவுதிருக் கோயிலுறை குமரவேளே!
மலைநாட்டுத் தமிழர்களின் மானம் போக்கி
மனிதரிலே உரிமையற்ற மடையராக்கி
சிலைகாட்டும் பொம்மைகள் போல்
செய்துவிட்டார்
சிங்களத்தின் தலைவர்கள்
எம் சீற்றங்கண்டு'

என்ற அந்தப் பாடலின் ஆரம்ப வரிகள் ஞாபகத்துக்கு வருகின்றன.

*- தொடருவம்.*

**Do you run a business?**

**Do you employ staff?**

**Do members of public have access to your business premises?**

*Give **Ragarfield** Insurance Brokers a call to arrange a no obligation quotation for your business / property insurance and if you like the competitive rates we can arrange, you may qualify for free access to a lot of features advising you comprehensively on*

- **Health & Safety**
- **Risk Management**
- **Legal Expenses**

**Covers for shops and businesses can be arranged with excesses as low as**

**£50** for Glass Claims
for Money Claims
for Frozen Food Claims
and for Goods in Transit Claims

Discounts are also available if you have the following

**Alarm, CCTV, Roller Shutters, Claims free experience, Staff living above the shop**

**ஆபத்து வருமுன் ஆவண செய்யுங்கள்!**

நீங்கள் ஏதும் வியாபாரம் செய்கின்றீர்களா? உங்கள் நிலையத்தில் பணியாளர்களை அமர்த்தியுள்ளீர்களா?

உங்களது ஸ்தாபன காப்புறுதித் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள். எமது சேவையினை ஏற்கும் பட்சத்தில் உங்கள் வியாபாரம் சம்பந்தமான கூடுதல் அறிவுரைகளை இனாமாகப் பெறுவதற்கு சாத்தியம் உண்டு.

உங்கள் அனைத்து காப்புறுதித் தேவைகளுக்கும் நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய 35 வருட அனுபவம் கொண்ட முறைக்கேற்றபடி தொழில் புரியும் (Professionlism ) நிபுணர்களாகிய எம்மை நாடுங்கள்.

பல முன்னணி காப்புறுதி நிறுவனங்களிடமிருந்தும் மிகக் குறைந்த கட்டணத்தில எங்கள் சகல காப்புறுதித் தேவைகளையும் பூர்த்திசெய்து கொள்ள அழையுங்கள்.

Most Trades are considered including the following

| | |
|---|---|
| **Supermarkets** | **Builders Merchants** |
| **Grocers** | **News Agents** |
| **Off Licenses** | **Boutiques** |
| **DIY & Hardware** | **Heating & Plumbing** |
| **Fish & Chips** | **Retail & Wholesale** |
| **Restaurants** | **Manufacturers** |
| **Clothing Retail** | **Wholesalers** |
| **Hairdressers** | **Production** |
| **Beauty Saloons** | **Distribution** |

**Need Van Insurance?**

We can arrange best available rates and also Protect your **No Claims Bonus** from 1 year onwards.

**Have 3 or more vehicles?**

We have access to exclusive motor fleet products and can arrange cover with any driver {17+ without any higher excesses} and many more features.

**Ragarfield** can source you great insurance products on excellent terms, to cover **EVERYTHING** that your business needs

We've been around for a While. For 35 years. So we have first rate relationships with leading insurers all over the marketplace.

இன்றே அழையுங்கள்.

Talk to us now…

Tel: **01474 32 88 88**

**Ragarfield Limited**
Insurance & Mortgage Brokers
31 Milton Road Gravesend Kent DA12 2RF
Authorized & Regulated by Financial Services Authority

***Your business insurance can also be extended to include the contents in the flat above if required***